# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai

CC 330/2018

Deposition of LW1 Examined as PW1

| | | |
|---|---|---|
| Name | : | Abdul Jabbar |
| Father's Name | : | Sikkandhar |
| Village | : | Kiliyanur |
| Taluk | : | |
| Post | : | |
| Religion | : | |
| Age | : | 63/2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.10.2022

**(எதிரி இந்நீதிமன்றத்தில் இன்று ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் படி மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கிளியதூரில் வசித்து மளிகை கடை நடத்தி வருகிறேன். கடந்த 25.11.2017 ம் தேதி இரவு 1.00 மணி அளவில் நானும் எனது நண்பர் ரியாஸ் முகம்மதுவும் ரத்னா தியேட்டரில் படம் பார்த்துவிட்டு திரும்ப ஊருக்கு போகும்போது எனது மருமகன் அசரப்அலி PY 01 BC 7527 Bajaj Pulsar என்ற இருசக்கர வாகனத்திலும் எங்களுக்கு முன்னால் சென்றுகொண்டிருந்தார். நாங்கள் அவருக்கு பின்னால் நாங்கள் சென்றோம். என் மருமகன் சென்ற இருசக்கர வாகனத்திற்கு முன்னால் ஒரு கார் சென்றது. அதன் எண் TN 18 0166 White Colour கார். அந்த கார் திடீரென பிரேக் போட பின்னால் சென்ற எனது மருமகனின் இருசக்கரவாகனம் முன்னால் சென்ற காரின் மீது மோதியது. விபத்து நடந்தபொழுதே கார் ஓட்டுநர் காரை விட்டு இறங்கி சம்பவ இடத்திற்கு வந்து பார்த்துவிட்டு கொஞ்ச நேரத்திற்கெல்லாம் சென்றுவிட்டார். விபத்தினை ஏற்படுத்திய வாகனமானது சென்னையை சேர்ந்ததாகும். விபத்தை ஏற்படுத்திய வாகனத்தினை ஓட்டியவர் பெயர் தம்புசாமியின் மகன் ஜீவா எம்.ஜி.ஆர் நகரை சேர்ந்தவர் என்பதை நவாஜி என்பவர் மூலம் தெரிந்து கொண்டேன்.

2. அந்த விபத்தின் காரணமாக எனது மருமகனுக்கு தலையின் பின்பக்கத்தில் பலத்த காயம் ஏற்பட்டது. இரண்டு கைகளிலும் சிராய்ப்பு காயங்கள் இருந்தது. நாங்கள் உடனே 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு 1.50 மணி அளவில் கொண்டு சென்றோம். அவரை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் இறந்துவிட்டதாக கூறினார்கள். எனக்கு என் மருமகன் என் கண் முன்னிலையில் விபத்து ஏற்பட்டு இறந்ததை பார்த்தவுடன் எனக்கு உடல்நிலை சரியில்லாமல் சென்றது. அதனால் நான் அடுத்த நாள் காலை 10.00 மணிக்கு

மயிலாடுதுறை காவல் நிலையம் செய்து புகார் மனுவினை கொடுத்தேன். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் மனு என்னால் எழுதப்பட்டது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. அடுத்த நாள் பிரேத பரிசோதனை முடித்து எனது மருமகனின் உடலை எங்களிடம் ஒப்படைத்தனர். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. புகாரை காவல் நிலையத்தில் வைத்து எழுதினீர்களா என்றால் ஆமாம். நீங்கள் எழுதினீர்களா என்றால் எனது நண்பர் எழுதினார், நான் கையெழுத்து செய்தேன். படித்து காட்டினாரா என்றால் படித்து பார்த்தேன். புகாரில் பிரேக் போட்டு நின்ற காரில் வேகமாக சென்ற அசரப் அலி அந்த காரின் பின்புறம் மோதி கீழே விழுந்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். காவல் துறையினர் பிரேத விசாரணை முடித்து எத்தனை மணிக்கு பிரேதத்தை ஒப்படைத்தார்கள் என்றால் 12.00 மணிக்கு ஒப்படைத்தார்கள். மேற்படி சம்பவத்தை பார்த்த அதிர்ச்சியில் எனக்கு உடல்நிலை சரியில்லாமல் போனதால் காவல் நிலையம் சென்று உடனடியாக புகார் கொடுக்க முடியவில்லை என்ற புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி விபத்தை ஏற்படுத்திய காரின் ஓட்டுநர் யார் என்பதை யார் உங்களிடம் சொன்னார் என்றால் நவாஜி என்பவர் சொன்னார். எத்தனை மணிக்கு சொன்னார் என்றால் பிரேத விசாரணைக்கு முன்பே சொன்னார்.

2. எனது சம்மந்தி முகம்மது இக்பால் என்பவருக்கு தகவல் தெரிந்தவுடன் 10.30 மணிக்கு எனக்கு சுயநினைவு திரும்பியவுடன் என்னிடம் சொன்னார். விபத்தை பார்த்த அதிர்ச்சியில் உடல்நிலை சரியில்லாமல் போனதால் மருத்துவமனையில் இருந்தீர்களா அல்லது வீட்டிற்கு சென்றீர்களா என்றால் நான் மருத்துவமனையில் இருந்தேன். பொதுவாக ஒரு வாகனம் ரோட்டில் செல்லும்போது பிரேக்போடும்போடு வாகனத்தின் பின்னால் லைட் எரியும் என்றால் சரிதான். சம்பவ இடம் மஞ்சலாறு பாலம் ரோடு இரண்டு பக்கமும் வாகனங்கள் செல்லகூடிய அகலமான ரோடு என்றால் சரிதான். பெரும்பாலும் இரவுநேரங்களில் வாகனங்கள் அதிகமாக செல்லாது , ஒரு சில வாகனங்கள் தான் செல்லும் என்றால் சரிதான். மஞ்சலாறு பாலத்தின் இருபக்கத்திலும் மின்சார விளக்கு உள்ளதா என்றால் அன்றைய தினம் தென்கரை பக்கம் லைட் எரியவில்லை, போஸ்ட் மரம் இருந்தது. பொதுவாக நான்கு சக்கர வாகனம் செல்லும்போது அந்த வாகனத்தின் அடையாளம் தெரியுமா என்றால் தெரியும். அசரப் அலி சென்ற வண்டிக்கும் நீங்கள் சென்ற வண்டிக்கும் இடையே உள்ள தூரம் 100 மீ இருக்குமா என்றால் இருக்கும். முன்னாடி சென்ற காரின் ஓட்டுநர் மெதுவாகவும் கவனகுறைவின்றி பிரேக் பேட்டார் என்றால் தவறு. அவர் பிரேக் போடும்போது வண்டியின் பின்புறம் உள்ள லைட் எரிந்தது என்றால் வண்டியில் எந்தவித லைட்டும் கிடையாது அதனால் தான் வண்டி மோதியது.

3. பல்சர் வண்டி அதிவேகமாக செல்லகூடிய சிசி திறன் கொண்ட வண்டி என்றால் சரிதான். முன்னாடி சென்ற கார் சாலை விதிகளை பின்பற்றி சென்று பிரேக் போட்டது என்றாலும் உங்கள் மருமகன் தான் வேகமாக சென்று இடது பக்கமாக சென்ற காரின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திகொண்டார் என்றால் சரியல்ல. உங்கள் மருமகன்தான் அதிவேகமாகவும் கவனகுறைவாகவும் சென்று முன்னாடி சென்ற காரின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திகொண்டார்

என்றால் தவறு. மருமகனே சென்று ஏற்படுத்தி கொண்ட விபத்தை வாகன விபத்து இழப்பீடு கோருவதற்காக தான் முன்னாடி சென்ற கார் விபத்தை ஏற்படுத்தியது என்று சொல்கிறீர் என்றால் சரியல்ல.

4. விபத்து நடந்த நேரத்தில் அதிர்ச்சியில் இருந்தேன் என்றால் அரை மணி நேரத்திற்கு சுயநினைவில் தான் இருந்தேன். கார் டிரைவர் இறங்கி வந்தார் அவரை பார்த்தீர்களா என்றால் அவரை பார்த்தேன் ஆனால் அவரை விசாரிக்கவில்லை. ரோட்டின் இடது பக்கமாக செல்லும்போது உங்கள் மருமகன் கவனமாகவும் மெதுவாகவும் வந்திருந்தால் காரின் மீது மோதாமல் வலது பக்கமாக சென்றிருக்கலாம் என்றால் சென்றிருக்கலாம் அவரால் கன்ட்ரோல் பண்ணமுடியாமல் போயிருக்கலாம். மேற்படி வழக்கிற்கு இறந்துபோன அசரப் அலியின் அதிவேகமும் அஜாக்கிரதையும் தான் முழு காரணம் என்றால் சரியல்ல. காரை ஓட்டி வந்த ஓட்டுநர் சரியான திசையில் தான் ஓட்டிவந்தார் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai

CC 330/2018

Deposition of LW2 Examined as PW2

| | | |
|---|---|---|
| Name | : | Riyaz |
| Father's Name | : | Mohamed Bazeer |
| Village | : | Kiliyanur |
| Taluk | : | |
| Post | : | |
| Religion | : | |
| Age | : | 33/2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.10.2022

**(எதிரி இந்நீதிமன்றத்தில் இன்று ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் படி மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கிளியனூரில் வசித்து வெளிநாட்டில் பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 எனது நண்பனின் அப்பா. 25.11.2014 ம் தேதி 10.00 மணிக்கு அ.சா..1 டன் ரத்னாதியேட்டருக்கு படம் பார்க்க சென்றிருந்தேன். படம் பார்த்துவிட்டு 1.00 மணிஅளவில் மஞ்சவாய்க்கால் பாலம் அருகில் வந்துகொண்டிருந்தோம். நான் எனது இருசக்கர வாகனமான புல்லட்டில் அ.சா.1 ஐ பின்னால் அமரவைத்துகொண்டு வந்துகொண்டிருந்தேன். எங்களுக்கு முன்பாக அசரப் அலி என்பவர் நான் கண் பார்க்கும் தூரத்தில் தான் தன்னுடைய பல்சர் PY 01 V 0166 என்ற வாகனத்தில் சென்று கொண்டிருந்தது. மஞ்சவாய்க்கால் பாலம் அருகில் சென்றுகொண்டிருந்த போது அசரப் அலி சென்ற வானத்தின் முன்னால் Toyoto Ethiyas என்ற நான்கு சக்கர வாகனம் TN 18 BC 7527 என்ற வாகனம் எந்தவொரு சமிச்சையும் இல்லாமல் திடீரென பிரேக் போட்டது.

2. அதன் விளைவாக அந்த வாகனத்தின் பின்னால் சென்று கொண்டிருந்த அசரப்அலி வாகனமானது அந்த வாகனத்தின் மீது மோதி கீழே விழுந்துவிட்டார். நாங்கள் உடனே இறங்கி சென்று பார்த்தபோது விபத்தின் காரணமாக அசரப் அலியின் பின்பக்க தலையில் பலத்த அடிப்பட்டு இருந்தது. பின்னர் அந்த விபத்திற்கு காரணமானவர் அவருடைய வாகனத்திலிருந்து இறங்கிவந்தார். அவரை நான் பார்த்தால் அடையாளம் சொல்வேன். பின்னர் நாங்கள் 108 ஆம்புலன்ஸ்க்கு கால்செய்தோம். அது வருவதற்குள் அக்கம் பக்கம் இருந்தவர்கள் தண்ணீர் கொடுத்து உதவினார்கள். பின்னர் நாங்கள் 108 ஆம்புலன்ஸ் மூலமாக அசரப் அலியை மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அவரை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் இறந்துவிட்டதாக கூறினார்கள். எங்கள் சொந்தகாரர் மூலமாக இந்த விபத்தை

ஏற்படுத்தியவரின் பெயர் ஜீவா சென்னை எம்.ஜி.ஆர் நகரில் வசிக்கிறார் என்பதை நாங்கள் தெரிந்துகொண்டோம். பின்னர் பிரேத பரிசோதனை முடித்து அசரப் அலியின் உடலை ஒப்படைத்தனர். புகாரை அ.சா.1 கொடுத்தார் என்பதை தெரிந்துகொண்டேன். நான் காவல் நிலையம் செல்லவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

1. நீங்கள் அசரப் அலி, அப்துல் ஜபார் ஆகிய மூவரும் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி மயிலாடுதுறையிலிருந்து கிளியனூர் நோக்கி சென்று கொண்டிருந்தோம் என்றால் சரிதான். உங்களுக்கு முன்னாடி அசரப் அலி வண்டியில் சென்றுகொண்டிருந்தார் என்றால் சரிதான். அவர் ஓட்டிய பல்சர் அதிவேக திறன் கொண்ட வண்டி என்றால் சரிதான். நீங்கள் மூவரும் ரோட்டின் இடதுபுறமாக சென்றுகொண்டிருந்தீர்கள் என்றால் சரிதான். காரும் உங்களுக்கு முன்பாக இடது புறமாகதான் சென்றுகொண்டிருந்தது என்றால் சரிதான். நவாஜுதீன் சம்பவம் முடிந்தபிறகு மயிலாடுதுறையிலிருந்து கிளியனூர் வந்துகொண்டிருந்தார் என்றால் சரிதான். அவரும் எங்கள் ஊரை சார்ந்தவர்தான்.

2. நீங்கள், அரசப் அலி, நவாஜுதீன், அப்துல் ஜபார் அனைவரும் உறவினர்கள் என்றால் ஒரே ஊர் ஒரே மதத்தை சார்ந்தவர்கள். உங்களுக்கு முன்னாடி சென்ற கார் மெதுவாகதான் சென்றது என்றால் அது எப்படி சென்றது என்று எனக்கு தெரியாது., நாங்கள் 40 கிமீ வேகத்தில் தான் சென்றோம். இந்த விவரத்தை போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளீர்களா என்றால் சொல்லவில்லை. பொதுவாக வாகனம் சென்று கொண்டிருக்கும்போது பிரேக் அடித்தால் பின்பக்கம் லைட் எரியும் என்றால் சரிதான். காரை ஓட்டியவர் ஜீவானந்தம், சென்னை சேர்ந்தவர் என்ற விபரம் எப்படி உங்களுக்கு தெரியும் என்றால் நவாஜுதீன் மூலம் தெரியும். டிரைவர் பற்றிய விவரங்கள் போஸ்மார்டம் நடக்கும்போது தெரியவந்தது என்றால் சரிதான்.

3. காரை ஓட்டிய ஓட்டுநர் கவனத்துடன் மெதுவாக ஓட்டினார் என்றாலும் இறந்துபோன அரசப் அலி தான் வேகமாக அஜாக்கிரதையாக சென்று விபத்தை ஏற்படுத்திகொண்டார் என்றால் சரியல்ல. நீங்கள்அனைவரும் ஒரே ஊரை சார்ந்தவர்கள் என்பதாலும் ஒரே மதத்தை சார்ந்தவர்கள் என்பதாலும் அசரப் அலிக்கு ஆதரவாக சாட்சியம் சொல்கிறீர் என்றால் சரியல்ல. காரை ஓட்டியவர் மீது எந்த தவறும் இல்லை அசரப் அலிதான் கவனக்குறைவாக ஓட்டி விபத்தை ஏற்படுத்திகொண்டார் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai

CC 330/2018

Deposition of LW3 Examined as PW3

| | | |
|---|---|---|
| Name | : | Mukthar |
| Father's Name | : | Jakiriya |
| Village | : | Elanthangudi |
| Taluk | : | |
| Post | : | |
| Religion | : | |
| Age | : | 49/2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.10.2022

**(எதிரி இந்நீதிமன்றத்தில் இன்று ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் படி மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது எலந்தங்குடியில் வசித்து எலக்ட்ரிஷியன் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ எனக்கு தெரியும். நான் வீட்டில் இருந்தபோது 26.11.2017 ம் தேதி இரவு 2.30 மணி அளவில் இறந்த அசரப் அலியின் அக்கா எனக்கு போன் மூலமாக அசரப் அலி மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதாக தகவல் சொன்னார். நான் 2.30 மணி அளவில் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு வந்து பார்த்தபோது விபத்தின் காரணமாக அசரப்அலி இறந்துவிட்டதாக கூறினார்கள். பின்னர் அடுத்த நாள் காலை அ.சா.1 புகார் கொடுத்தார். நானும் அவருடன் மயிலாடுதுறை காவல் நிலையம் சென்றிருந்தேன். பின்னர் பிரேத பரிசோதனை முடித்து அசரப் அலியின் உடலை ஒப்படைத்தனர். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணை**

இறந்துபோன அசரப் அலி எனது மைத்துனரின் மகன் என்றால் சரிதான். இந்த விபத்து பற்றி உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். மயிலாடுதுறைக்கு பிரேத விசாரணையின் போது தான் நீங்கள் சென்றீர்கள் என்றால் சரிதான். கார் சரியான திசையில் வாகன விதிகளை பின்பற்றி சென்றது என்றாலும் அசரப் அலி தான் அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் சென்று காரின் மீது விபத்தை ஏற்படுத்திகொண்டார் என்றால் சரியல்ல. அசரப் அலி உங்கள் உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறீர் என்றால் சரியல்ல.